/குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்/
எஸ்டிசி எண்.43/2020

வாசா 2 சண்முக சுந்தரம் த/பெ. அரங்கசாமி
தேதி 27-07-2021
பக்க எண். 1

மனு எண். 534/2021 அனுமதிக்கப்பட்டதன் பேரில் வாசாஆ 2 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் தாரமங்கலம் அஞ்சல், 11 வது வார்டு வாத்தியார் தோட்டம், கதவு எண் 93 என்ற முகவரியில் வசித்து வரும் அரங்கசாமி மகன் ஏ.சண்முகசுந்தரம் ஆகிய நான் கூடுதல் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதை ஏற்று புகாரின் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் கீழ்க்கண்டுள்ள 2 ஆவணங்கள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அஞ்சல் ஒப்புகை அட்டை **வாசாஆ 8** மற்றும் அஞ்சலக ரசீது **வாசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாசாஆ 8ல் கண்டுள்ள எதிரியின் கையொப்பம் வழக்கு காசோலையில் உள்ள கையொப்பத்திலிருந்து மாறுபட்டுள்ளது. எதிரிக்கு பாரம்பரிய சில்க்ஸ் என்ற முகவரியிலும் பழனியப்பா நகர் சேலம் என்ற முகவரியிலும் எந்த நாளில் மற்றும் எந்த நேரத்தில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்தேன் என்று நிரூபிக்கவேண்டியது என் கடமை என்றால் எதிரி கையெழுத்து போட்டு வாங்கியுள்ளார் என்று எனக்கு தெரியும். வாசாஆ 8இல் கண்டுள்ள 11-10-2018 என்ற குறிப்பு போஸ்ட்மேனால் போடப்பட்டதா என்று நிரூபிப்பதற்கு சம்மந்தப்பட்ட துறையினரை சம்மன் அனுப்பி விசாரிக்க நான் தயாரா என்றால் விசாரிக்கவில்லை. எதிரி கையொப்பம் இட்டு வாங்கியுள்ளார். எதிரி நேராக கையொப்பம் செய்து வாங்கியதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் குறைபாடுகளை சரி செய்வதற்காக தற்போது **வாசாஆ 8 மற்றும் வாசாஆ 9 ஐ** நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் சென்னை விலாசத்திற்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்ன ஆனது என்றால் அதன் அஞ்சலக ஒப்புதல் அட்டை எனக்கு கிடைக்கவில்லை. மேற்படி தபால் என்ன ஆனது என்றால் தெரியவில்லை. எதிரியின் சென்னை விலாசம் எனக்கு யார் கொடுத்தார்கள் என்றால் எதிரியுடன் அவரது கடைக்கு சென்று உரையாடிய சமயத்தில் எதிரி கூறியதை வைத்து எனக்கு தெரியும். நான் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பான்கார்டு வாங்கியுள்ளேன். எனது பான்கார்டு நம்பர் CHEPS689L என்பதாகும் என்றால் சரிதான். கடந்த 15 வருடங்களாக வரி ஏய்ப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் முறையாக கணக்கு வைத்துள்ளேன். ஆனால் வரி கட்டவில்லை. எனது அலைபேசி எண் என்ன என்றால் 8608806502 ஆகும். காலை சுமார் 10 1/2 மணி முதல் 11 மணிக்குள் எதிரி

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு காசோலை கொடுத்தார். நான் ஆடிட்டர் வைக்கவில்லை. நீதிமன்றத்தில் எனது கணக்கு வழக்குகளை ஒப்படைக்க தயாரா என்றால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் அளவிற்கு நான் கணக்கு வழக்குகளை பராமரிக்கவில்லை. நான் சரியாக எனது கணக்கு வழக்குகளை பராமரிக்கிறேன் என்றாலும் அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் இவ்வழக்கின் காசோலை பற்றிய உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதாலும், ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் வழக்கு காசோலை எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்றாலும், எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் நீதிமன்றத்தில் வைத்துதான் முதன் முதலில் எதிரிக்கு என்னை தெரியும் என்றாலும் சரியல்ல. ஒரு நிக்சன், வக்கீல் ஏ.எம் சதிஸ், மேற்படி வக்கீலின் உறவினர் வி. செந்தில்குமார் ஆகியோருடன் நான் சேரந்து கூட்டு சதி செய்து மேற்படி நிக்சனிடம் இருந்த எதிரியின் காசோலையை துர்லாபம் அடைய வேண்டி பூர்த்தி செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் எதிரிக்கு கொடுத்த கடன் பற்றி கணக்கு பராமரிக்கவில்லை என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. வியாபாரம் செய்யும் ஒருவர் நம்பிக்கையின் பேரில் ரூபாய் 7 லட்சம் கடனாக கொடுத்ததாக கூறுவது நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டியவன் என்றால் சரியல்ல. நான் நல்ல எண்ணம் படைத்த மனிதன் அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது.)

(மறுவிசாரணை இல்லை.)